# இலங்கை வங்கி

## விண்ணப்பம் கோரல்

### மதிப்பீடுகள் மீளாய்வுக் குழுவிற்கான உறுப்பினர்களை நியமனம் செய்தல்
### (அசையும் / அசையாச் சொத்துகள்)

**இலங்கை வங்கி மதிப்பீடுகளுக்கான உயர் மீளாய்வு அங்கீகாரம் பெற்ற தனது மதிப்பீடுகள் மீளாய்வுக் குழுவில் 2 வருடங்கள் சேவையாற்றுவதற்கு தற்போது பொதுச் சேவையிலுள்ள தகுதிவாய்ந்த மதிப்பீட்டாளர்களை அழைக்கின்றது.**

**கடமைகள்**

1. மதிப்பீடுகள் மற்றும் வங்கியின் மதிப்பீட்டாளர்கள் குழு சம்பந்தமாகவும் சம்பந்தமாகவும் ஆலோசனைகளை வங்கிக்கு வழங்குதல்.
2. வங்கியால் மீளாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் கடன் வசதிகள் தொடர்பான அசையும் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகளை மீளாய்வு செய்தல்.
3. குத்தகை மற்றும் தொடர்மாடிக் குடியிருப்பு சொத்துக்கள் தொடர்பான (Condominium Properties) மதிப்பீடுகளை மீளாய்வு செய்தல்.
4. வங்கியின் மதிப்பீட்டாளர் குழுவிற்கு மதிப்பீட்டாளர்களை இணைத்துக் கொள்வதற்கு, மதிப்பீட்டாளர்களின் தகைமைகளை ஆராய்ந்து, வங்கிக்கு பரிந்துரை வழங்குதல்.
5. வங்கியால் வாங்குவதற்காக / விற்பதற்காக உத்தேசித்துள்ள சொத்துக்கள் தொடர்பான மதிப்பீடுகளை மீளாய்வு செய்தல்.
6. வங்கியால் வாடகைக்கு எடுக்கப்படும் / விடப்படும் கட்டடங்களின் வாடகை மதிப்பீடுகளை மீளாய்வு செய்தல்.
7. வங்கியின் சொத்துக்களின் மீள் மதிப்பீடுகளை மீளாய்வு செய்தல்.

**எதிர்பார்க்கப்படும் முக்கியமான தேவைப்பாடுகளும் அனுபவமும்**

இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (IVSL/RICS) இணை உறுப்பினராக (Fellow Member) இருப்பதுடன், இலங்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் சிரேஷ்ட மதிப்பீட்டு அதிகாரி அல்லது அதனிலும் உயர் பதவியில் கடமையாற்றி ஓய்வுபெற்ற அரச மதிப்பீட்டாளராக இருத்தல் வேண்டும். அத்துடன் மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் தொடர்ச்சியான மேம்படுத்தல் பயிற்சியினையும் பெற்றிருத்தல் வேண்டும். (இலங்கை வங்கியின் மதிப்பீட்டாளர் குழுவில் B தரத்து மதிப்பீட்டாளர்களாக பணிபுரிவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

- வயது எல்லை - விண்ணப்பிக்கும்போது 68 அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி 2 வருட கால ஒப்பந்த அடிப்படையிலானது.
2. வங்கியால் வாராந்தம் / தேவையேற்படும் போது இலங்கை வங்கி தலைமைக் காரியாலயத்தில் நடாத்தப்படும் மதிப்பீட்டு மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல் வேண்டும்.
3. தெரிவு செய்யப்படும் மதிப்பீட்டு மீளாய்வுக் குழு அங்கத்தவர்களுக்கு கவர்ச்சிகரமான கொடுப்பனவு வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

சுயவிபரக் கோவையுடன் உரிய சான்றிதழ்களின் நிழற்பிரதிகளை இணைத்து கீழ்வரும் முகவரிக்கு விளம்பரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது agmcco@boc.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி 011-2205027 / 011-2330761 எனும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

**உதவி பொது முகாமையாளர்**
**(மத்திய கடன் செயற்பாடுகள்)**
***25வது மாடி, தலைமை அலுவலகக் கட்டிடம்.***
***“இலங்கை வங்கிச் சதுக்கம்” இல.1. இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.***

**மேலதிக தகவல்களுக்கு மதிப்பீட்டு மீளாய்வுக் குழுச் செயலாளரை 011-2205016 எனும் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.**

**எந்த ஒரு சிபாரிசு செயற்பாடுகளும் தகுதியிழப்பிற்கு காரணமாக அமையும்.**

**தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் அழைப்பு விடுக்கும் உரிமை வங்கிக்குரியது.**

**நிபந்தனைகளுக்குட்பட்டது.**


1975 BOC CALL CENTRE
www.boc.lk
AA-(lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்.
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact
தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்